"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

பூலோகவியாஸன்.

REGISTERED 10 JUN 1910

மாதாந்தரப்பிரசுரம்

தொகுதி 6] சென்னை, 1909௵ ஜுலை௴ [பகுதி 7.

ராஸிலஸ்.

147ம் பக்கத்தொடர்ச்சி

உஷ்ணசக்கரத்திற்கு உட்பட்ட தேசங்களில் மனுஷர் எவ்வித காலக்ஷேபம் செய்வதும் விருந்து உண்டுகொண்டாடுவதும் பகலில் அல்ல, பொழுது அஸ்தமித்தபின். ஆகவே, தொடங்கிய சங்கீத விநோதம் முடிந்து ராஜகுமாரத்திகள் எழுந்து பள்ளிகொள்ளப் போக அர்த்த ராத்திரிவரையில் சென்றது. அப்பால் ராஸிலஸ் தன் கூட்டாளியை வரவழைத்துக் கதை சொல்லச் சொன்னான்.

இம்லாக்:—துரையே, என் கதை சொல்லிமுடிய நாழிகை செல்லாது. வேறு முயற்சியின்றிக் கலையிலும் விர்த்தியுடையோர் காலம் ஆரவாரமற்று அமைதியாய்க் கழியும். அதில் கவனிக்கத்தகும் முக்கிய சங்கதிகள் பல இரா. நாலு பெயர் கூடும் சமூகத்தில், பேசுவது தனித்திருக்கும்பொழுது விஷய சிந்தனை செய்வது, நூல் வாசிப்பது, வாசிக்கக் கேட்பது, தெரிந்தோரைக் கேட்டுச் சந்தேகம் தெளிவது, தெரியாதவர்க்குச்சந்தேகம் தெளிவிப்பது இம்மாத்திரமே வித்தியாவிநோதன் வேலையாம். அவன் ஆடம்பரமும் அச்சமு மின்றித் தேசந்தோறும் திரிவான் அவனைப்போல் கற்றவர்களன்றி மற்றவர்கள் அவன் பெயர் ஊர் விவரம் அறிவது மில்லை, அவனைச் சன்மானிப்பதுமில்லை.

எனது ஜன்மராச்சியம் கொய்யாமர,-அது நீலநதிஉற்பத்தி ஸ்தானத்திற்குத் தூரமல்ல, சமீபந்தான். என் தந்தை திரண்ட திரவியமுள்ள வர்த்தகர் அவர் வர்த்தகம் ஆப்பிரிக்காவின் மத்தியப் பிரதேசங்களிலும் செங்கடற்றுறை அடுத்த நாடு நகரங்களிலும் நடந்தது. அவர் யதார்த்தவாதி, சிக்கெனவும் தாளாண்மையும் உள்ளவர்; அவர் மனமோ, அற்ப விஷயங்களில் பிரவர்த்தித்தது. அவர் அகன்ற அறிவினர் அல்ல. திரவியம் தேடுவதும் தேடும் திரவியத்தை அதிகாரிகள் அபகரித்துக் கொள்ளாவண்ணம் க்ஷேமித்து வைப்பதுமே அவருக்கு முக்கிய இஷ்டம்.

ராஸிலஸ்:-என் தந்தை செங்கோல் செலுத்தும் இந்த ராச்சியத்தில் வாழும் குடிகளில் எவனுவது பிறர் சொத்தை அபகரிக்கத் துணிவதுண்டானுல், ராஜதர்மம் தவருது நிறைவேற்றுவதைப்பற்றி அவர் எண்ணமற்றிருப்பது வாஸ்தவமே. அரசர் தாம் செய்யும் அநியாயத்திற்கன்றி, பிறர் செய்ய இடங்கொடுக்கும் அநியாயத்திற்கும் உத்தரவாதிகள். இது என் பிதாவிற்குத் தெரியாதா நான் சக்கரவர்த்திப்பட்டம் ஆளச் சம்பவித்தால்என் குடிகளில் கடையருக்கும் நிஷ்டூரம் செய்யும் பாதகரைத் தண்டனைக்குத் தப்பவிடேன். ஒருவன் பிறர் பொருளைத் தன் பொருள் போலப் பேணி வாணிகம் செய்து தேடிய திரவியத்தை நாடாள்வார் அச்சுறுத்திக் கொள்ளை கொள்வாரென்று ஏங்கி, அனுபவிக்காமல் ஒளித்து வைத்தாரென்று உமது வாக்குமூலமாய்க் கேட்டு, என் உதிரம் கொதிக்கின்றது. குடிகள் சொத்தைக் கொள்ளைகொண்ட அதிகாரி எவன்? பெயர்—ஊர் விவரமாய்ச் சொல்லும். அவன்செய்த பாதகத்தைச்சக்கிரவர்த்திக்கு அறிக்கைசெய்வேன்

இம்லாக்:-மஹா பிரபூ உங்கள் ஆசக்தி இளம் பருவத்திற்கு உரிய சுகுணத்தின் வேகத்தால் விளைந்தது. இந்தப் பருவ இயற்கை நீடித்து நிற்காது. உங்கள் தந்தை மீது தோஷம் இல்லை யென்று நீங்களே ஒப்புக்கொண்டு குறித்த அதிகாரி செய்த அநியாயததை இவ்வாறு பதைக்காமல் பொறுத்துக் கேட்கும் காலம் வரும். அபிஸீனியா ராச்சியத்தில் நிஷ்டூரம் அடுத்து நடப்பதும் இல்லை. நிஷ்டூரம் செய்வார் தண்டனைக்குத் தப்புவதும் இல்லை. ஆனுலும் குரூர கிர்த்தியங்களை ஒட்டுப் பற்றறத்

தவிர்க்கத்தக்க அரசாட்சிவகை இன்னதென்று இந்நாள்வரையும் எவரும் கண்டறியவில்லை. அரசாட்சி உத்தியோகம் நிர்வகிப்பவர்கள் அரசருக்கு அடங்குவதும் குடிகளை அடக்கி ஆள்வதும் இயற்கை. அதிகாரம் மனுஷர் கைவசப்பட்டால் சிறுபான்மை அக்கிரமமாய்ச் செலுத்தப் படும். அதிகாரிகளை அடக்கவல்ல அரசநடைய ஜாக்கிரதையால் அதிக்கிரமம் தவிர்க்கும் உபாயம் தவறாது சிததிக்கும். பின்னும் அவ்வகை உபாயம் செய்வதற்கு நிமித்தம் இல்லாமற் போகாது. ராச்சியத்தில் நடக்கும் அக்கிரமம் அனைத்தையும் அரசன் ஒருபொழுதும் அறியவுமாட்டான், அறிந்த அக்கிரமம் அனைத்திற்கும் தண்டனை செலுத்தவும் மாட்டான்.

ராஸிலஸ்:- இது எனக்குப் புத்திகோசரமாக வில்லை. ஆகாதிருந்தும் முக்கியமாம் ஆக்ஷேபிக்கவல்ல, உமது வாய்மொழியைச் செவி கூர்ந்து கேட்க வாஞ்சித்திருக்கிறேன். உமது சரித்திரத்தை விட்ட குறையினின்று சொல்லும்.

இம்லாக்:-ஆதியில் தகப்பனார் எனக்கு வாணிகயோக்கியத்தை உண்டாக்கும் வன்மையுள்ள கல்வித்துறைகளையன்றி மற்றொன்றையும் கற்பிப்பதில்லையென்று எண்ணமிட்டிருந்தார். பின்பு நாளடைவில் எனக்கு அபூர்வ ஞாபகசக்தியும் தீவிர புத்தியும் இருப்பதறிந்து, அவர் மகனே! நீ இனிமேல் அபிஸினியாவில் இணையற்ற செல்வனாயிருக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறேன் எனப் பெரும்பாலும் சொல்வார்.

ராஸிலஸ்:-அனுபவிக்கவும் நாலு பெயர் காண அறிய அச்சமற்று வைத்தாளவும் கூடாத அபரிமிததிரவியம்தேடிப்புதைத்து வைத்திருந்த உமது தந்தை பின்னும். அதன் விர்த்தியை விரும்பிய காரணம் என்ன? நீரோ சத்தியவாதி. உமது சொல்லுறுதியைப்பற்றி ஐயுற எனக்குமனம் இல்லை. ஆனாலும் ஒன்றுக்கொன்று பொருந்தாத வாக்கியம் இரண்டும் வாஸ்தவமாதல் கூடாதே.

இம்லாக்:-ஒன்றுக்கொன்று இணங்காத இரண்டில் ஒன்றொழிய இரண்டும் வாஸ்தவமாகா மனுஷரைச் சுட்டிச் சொல்லில்

அவைஇரண்டும் வாஸ்தவமாயினும் ஆகும் ஆனாலும் விகற்பம் என்பதும் ஒவ்வாமை அல்லது பொருந்தாமை என்பதும் ஒரு பொருட் பதங்கள் அல்ல இனி எவ்வளவும் அச்சமற்றிருக்கும் காலம் வருமென்று என் பிதா எதிர்ப்பார்த்திருப்பினும் இருப்பாரே. எவ்விதததிலும் வாழ்நாளை வீணாளாகப் போக்காது ஏதாம் முயற்சி செய்ய யாதாயினும் ஓராசை இருக்கத்தான் வேண்டும். வாஸ்தவமாய்உள்ள குறைதீரப்பெற்றவன் இல்லாக்குறைகளை மனோபவமாய் வருவிக்கவேண்டும்.

ராஸிலஸ்:-இது எனக்குஒருவாறுபுலப்படுகின்றது. இடையிலே தடுத்துக் கதைப்பொருத்தைக் குலைத்ததைப் பற்றிமனஸ்தாபப்படுறேன்.

இம்லாக்:-இவ்வாசையை இதயத்தில் இருத்தி, பிதா என்னைப் பள்ளிக்கு வைத்தார் அறிவால் உண்டாம் இன்பமும் ஆய்மதியால் விளையும் ஆனந்தமும் கற்பனா சக்தியால் பிறக்கும் அபிமானமும் அங்கெனக்கு அனுபவப்படவும் ஆருக்கும் சொல்லாமல் நிறைசெல்வத்தைத் துரும்பென நிந்தித்துத் தள்ளத்தலைப்பட்டேன் என்னைக்குறித்துத் தந்தை உள்ளத்தில் குடிகொண்ட எண்ணம் சிதறிப்போகும்படி செய்யச் சங்கற்பித்தேன். என் பிதாவுடைய ஸ்தூல புத்தியை எண்ணி எண்ணிப்பரிதபித்தேன் என் க்ஷேமத்தில் கண்ணும் கருத்துமாயிருந்த அவர் என்னை நானாதேசங்களுக்கும் அனுப்பிப் பக்குவசாலி ஆக்கநினைத்திருந்தார். எனக்கு மிகு இளைப்பும் தவிப்பும் உண்டாக்கும் இந்தப் பிரயாணத்திற்குத் தகப்பனார் குறித்திருந்த காலம் கிட்டுமுன் எனக்கு இருபது பருவமாயிற்று அதற்குள் ஒருவர் பின் ஒருவராகப் பண்டிதர்கள் பலர் என் ஜன்ம தேசததில் வழங்கும் இலக்கணவிலக்கியங்கள் அனைத்தும் எனக்குக் கற்பித்திருந்தார்கள் நாழிகைக்கு நாழிகை எதாயினும் நூதன விஷயம் கற்றுக்கொண்டு வந்ததனால் நான் இடையுறாது எப்பொழுதும் மனமகிழ்ந்திருந்தேன், நான் வளர்ந்து ஆடவனாக ஆக, முன் உள்ள ஆசிரிய வணக்கம் மிகக் குறைந்து போயிற்று பாடம் கற்பித்து முடிந்த பின் என்ஆசிரியர்கள் சாமானியஜனங்களைக்காட்டிலும் விவேகிகளென்றும் குணநலத்தால் சிறந்தவர்களென்றும் எனக்குத் தோன்றவில்லை. இதே எனக்கு அவர்கள் மீதுள்ள மதிப்பு குன்றியதற்கு நிமித்தம்.

OF THE REGISTRAR OF BOOKS
MADRAS

அத்துவித சித்தாந்தம்.

148-ம் பக்கத்தொடர்ச்சி.

ஆகாயங் காரணமும் மற்றப்பூதங்கள் காரியமுமாகிறபோது காரணமான மண்ணையன்றிக் காரியமான குடத்திற்குப்பொருள், எவ்வாறின்றோ, அவ்வாறே காரணமான ஆகாயத்தையன்றிக் காரியமான வாயு, தேயு, அப்பு பிருதிவிகளுக்குப் பொருளில்லாமற்போம். இந்தப் பிரகாரமே சிவப்பிரமப் பொருள் காரணமும், ஆன்மா காரியமுமாகி, சிவப்பிரமத்தையன்றி ஆன்மாவுக்குப் பொருளில்லாமற்போம். காரியத்திற் காரணம் பூரணமாயிருக்கிறதெனல் காரணத்தைப்போல காரியஞ் சத்தாயிருந்து அதில் நிறைய காரணமிருக்கின்றதென்பதல்ல. மண்குடத்தினிறைய விருக்கின்றதென்னில் மண்ணைபபோல குடமென்கிற பொருள் ஒன்று சத்தாயிருந்து அதில் நிறைய விருக்கின்றதென்பதல்ல. கயிறுன்னது பாம்பின் கண் நிறைய விருக்கின்றதென்றால் கயிற்றைப் போலப் பாம்பென்கிற பொருள் ஒன்று சத்தாயிருந்து அதில்கயிறு நிறைந்திருக்கின்றதென்பதல்ல கயிறுஉண்மை; பாம்பு உண்மைப்போலி. அதுபோல மண் உண்மை,குடம் உண்மைபோலி. இத்திருட்டாந்தங்களைப்போல் ஆகாயம் உண்மை; மற்றச்சதுர்பூதங்களும் உண்மைப்போலி. இவைகளைபோலச் சிவப்பிரமம் உண்மைப்பொருள்; ஆன்மா உண்மைப்போலிப் பொருளாம். சிவப் பிரமமும் ஆன்மாவும் குடமும் படமும் போலல்ல. குடமும் உண்மைப்பொருள்; படமும் உண்மைப் பொருள். இவ்வாறு சிவப் பிரமத்தையும் ஆன்மாவையுஞ் சொல்லின் இரண்டுங் கண்டப்பொருளாய் அபரிபூரண தோஷத்தை அடையும். இரண்டையும் பரிபூரணப் பொருளெனக் கூறும். துவிதசித்தாந்திகட் கிஃதுடன் பாடாமா? சிவப், பிரமத்தைப் பரிபூரண சத்தாகவும் ஆன்மாவை அணுரூப சத்தாகவும் கொள்பவருக்கே கடபடம்போல இரண்டும் சத்தாகா வென்னின் இரண்டையும் பரிபூரணமென்பார்க் கெங்ஙனம் பொருந்தும்? இதனல் ஆகாயம் மற்றச் சதுர்பூதங்களிலிருப்பதுபோலச் சிவப்பிரமம் ஆன்மாவில் பூரணமாயிருக்குமென்கை துவிதிகளுக்குப் பாதகமும் அத்வைதிகளுக்குச் சாதகமுமாய் முடிந்ததெனறறிக.

இதன் முடிவு யாதெனின் சச்சிதானந்த நித்திய பரிபூரணப் பொருளுக்குப் பிரமமென்றும், சிவனென்றும், ஆன்மாவென்

றும், சுருதிமுதலிய பிரபல நூல்கள் கூறுகின்றனவெனவும் அப்பொருள் பிரம்மமாயிருப்பதால் வேதமுதலிய நூற்களைப் பிரமாணமாயக்கொண்டு யாவரும் ஏகான்ம வாதிகளாமென்று சொல்லத்தக்கவரெனவும், ஷெ பிரமாணங்களை இச்சித்தாந்திகளும் அங்கீகரிக்கக் கடமைப்பட்டிருப்பதால் இவர்களும் ஏகான்மவாதிகளே யாமெனவும், இதற்கு மாறிப் பேசுவோர் வேதசாஸ்திரவுண்மை யறியாதாரெனவும், அப்பரமசிவ ஆன்மப் பொருளுக்குப் பின்னமாக ஜனன, மரண துன்பங்கட்குட்பட்ட அணு ஜீவர்கள் பல அநிர்வசனீயமாக வுள்ளனவெனவும், இடையில் பரிபூரண ஆன்மாக்கள் பல சந்தாயிருக்கின்றனவென்பது வெற்றுரையே யாமெனவும், துவித சைவ சித்தாந்தம் போலிச்சித்தாந்தமாய்த் தள்ளத்தக்கதெனவும், அத்துவித சைவசித்தாந்தமே யதார்த்த சித்தாந்தமாய்க் கொள்ளத்தக்கதெனவும், அதுவே சுருதியுக்தி அநுபவங்கட்குப் பொருந்தியதெனவும் பசுமரத்தாணிபோல் நாட்டியவாறுமென்றறிக.

வேதாந்திகள் காரண காரியவாதம், பரிணாமவாதம் பிம்பப்பிரதிபிம்பவாதம் விவர்த்தவாத முதலிய பலவிதவாதங்கள் ஒவ்வொரு அவசரத்திநிமித்தம் ஒவ்வொன்று கூறினும் முடிவில் தீர்மானமாய் விவர்த்தவாதமே கூறுகின்றார்கள். அவ்விவர்த்தங்கள் பலவற்றிலும் அதாவது கயிற்றரவு கானனீர் இந்திரசாலம் சொப்பனவுலகு முதலியவற்றிலும் சொப்பனவுலகே தீர்மானமாய்க் கூறுகின்றார்கள். ஒவ்வொரு அவசரத்திற்கு ஒவ்வொன்று கூறுவதற்கு காரணம் புத்திமான்கள் யூகித்துணர்ந்தறியாதிலர். அப்படியே பிரதிபிம்பமாகச் சொல்லுஞ் சிவனையுங்கொள்க. பிரமஸ்தானத்தில் மனதையும, சிவன் ஸ்தானத்தில் சொப்பன ஜீவனையும், சிவனுக்கிடமான அவித்தியாஸ்தானத்தில் சொப்பன ஜீவர்கள் தோற்றுதற்கிடமான (மனத்தின் கணுள்ள ஓர்வித) சத்தியையும் உவமானமாக வைத்துப்பார்க்கவேண்டியது.

இனி ஆத்மானு சந்தானத்தையடைதற்கு நேர்சாதனமிதென்றும், பரம்பராசாதனமிதென்றும் விவரிப்பாம். நேர்சாதனமாவது சுகமார்க்கமாகியசாதன சதுஷ்டியமெனும் நித்தியா நித்திய வஸ்து விவேகம், இகமுத்திரார்த்தபலபோஜவிராகம், சமாதிசட்

கசம்பத்தி, முமுட்சுத்துவம் ஆம். இவற்றிற்குகீழ்பரம்பராசாதனமானவாம மார்க்கமாகிய சரியை, கிரியை, யோகம்ஞானமுமாம். சாதன சதுஷ்டயம் முமுட்சுவால் அடையத்தக்கனவே. இதுவே அத்வைதஞான மடைதற்குபாயம். இதயார்ச்சனை செய்பவனே அத்வைதஞானியாவன். சரியையாதிகளால் பாஹிர் பூஜைசெய்பவன்புனர்ஜன்மத்தையும் போகத்தையும் அடைந்து சந்தோஷிப்பான் இது பதமுத்தியாம் முற்கூறிய அத்வைத ஞானம்பரமுத்தியாம். உதாரணமாக வராகோபநிஷத் இரண்டாவது அத்தியாயததில் (1) தன்னுடைய வருணாசிரம தருமத்தினாலும், தபசினாலும் குருவைச்சந்தோஷப் படுத்துவதினாலும் புருஷர்களுக்கு வைராக்கிய முதலிய சாதனசதுஷ்டயம் உண்டாகின்றது. (2) “என்னுடைய பூர்ணாத்மாவைத் தவிர ஜகத் ஜீவன்மாயை முதலியவைகளில்லை; அவைகளுக்கு நான் விலட்சணன். (3) சர்வசாட்சியாயும் வருணாசிரம மற்றதாயுமிருக்கிற (தன்) ஆத்துமாவைப் பிரம சொரூபமாகவே பார்க்கிறவன் பிரமமேயாகிறான் (4) “ஆநந்தமாயும், இருமையற்றதாயும், குணங்களற்றதாயும், சத்தியமானதாயும், சித்கனமாயுமிருக்கிற அந்தப்பிரமத்தை தன் ஆத்மசொரூபமாக அறிந்தவன் ஒன்றிலிருந்தும் பயமடைகிறதில்லை.

(இன்னும் வரும்.)

ஆத்மநேசன்.

பு. ஜயராம்பிள்ளை.

கவிநவரத்திநம்.

நமது இந்துதேசத்தில் மற்றத் தேசங்களைவிட ஸம்ஸ்கிருதம் தமிழ் முதலான பாஷைகளில் வரகவிகள்என்று பேர்பெற்ற வித்வான்கள் பலர் இருந்திருக்கிறார்கள். ஆயினும் அவர்களது கீர்த்தியின் சரீரங்களாகிற புத்தகங்களைமாத்திரம் நாம் பார்த்தும் படித்தும் வருகிறோம். அவர்களுடைய சரித்திரங்களைப் பற்றி நிச்சயமாய்ச்சொல்ல நமக்கு ஒன்றும் ஆதாரங்கள் இல்லை. ஆனால் ஜனங்களுக்குள் அவர்களைப்பற்றி வழங்கிவருகின்ற கதைகளினாலும், சிலாசாஸநம் முதலிய ஆதாரங்களினாலும் சில

விஷயங்கள் ஒருவாறு தெரியவருகின்றன. அவைகளைக்கொண்டு நம்மால் கூடியமட்டும் அவர்களுடைய சரித்திரங்களைப்பற்றிச் சிறிது எழுத முயலுவோம்.

நவரத்நங்கள்:—ஸம்ஸ்கிருதபண்டிதர் யாரையாவது காளிதாஸன் முதலிய கவிகள் எப்பொழுது வாழ்ந்திருந்தார்கள் என்று கேட்டால், அவர்கள் ஒரு சுலோகம்சொல்வது உண்டு. அதன் தாத்பரியம் என்னவென்றால், காளிதாஸன், தன்வந்தரி, க்ஷபணகன், அமரஸிம்ஹன், சங்கு, வேதாளபட்டன், கடகர்ப்பரன் வராகமிகிரன், வரருசி இவர்கள் ஒன்பதுபேர்களும் ஒன்பது ரத்நங்கள்போல விக்கிரமாதித்ய மகாராஜாவின் சபையில் விளங்கிவந்தார்களென்று சொல்லுவார்கள். இதைவிடக் கொஞ்சம் அதிகமாய் இவர்களைப்பற்றி எழுத நாம் முயலுவோம்.

காளிதாஸன்.

விக்கிரமார்க்க சகமென்று வடநாடுகளில் வழங்கிவரும் ஆண்டுக்குத் தலைவனான விக்கிரமாதித்திய அரசன் கி. மு. 56 வது வருஷத்தில் வாழ்ந்திருந்தவன். அந்தக் காலமானது சற்றேறக்குறைய 1955 வருஷங்களுக்குமுன். அப்பொழுது அந்த மகாராஜன் வடக்கே ஆட்சிசெலுத்திவந்தான். இவர்காலத்தில் தான் இந்த ஒன்பது ரத்னங்கள் விளங்கினார்களோ அல்லது அதற்கு முந்தியோ பிந்தியோவென்று சந்தேகிக்கவேண்டியதாய் இருக்கிறது. ஏனெனில், விக்கிரமராஜனென்றும், போஜனென்றும் பேர்பெற்ற மற்றொரு அரசன் மாளவதேசத்தில் கி. பி. 1040-1090 வருஷங்களுக்கு இடையில் ஆண்டுவந்ததாக அநேக சிலாசாஸனங்களினால் தெரியவருகிறது. மேலும் இவர் வசித்த முக்கியபட்டணங்கள் உஜ்ஜயினி, தாரா முதலிய நகரங்களாகத் தெரியவருகிறது. ஒன்பது ரத்நங்கள் உஜ்ஜயினிநகரத்தில் விக்கிரமராஜன் சபையில் பிரகாசித்ததாக வழங்கிவருகிறபடியாலும், இந்த விக்கிரமனுக்கு போஜனென்னும் மற்றொருபேர் இருக்கிறபடியினாலேயும், காளிதாஸன் சற்றேறக்குறைய 815 வருஷங்களுக்குமுந்தி மாளவதேசத்தில் வசித்துவந்ததாகச் சிலர் சில ஆதாரங்களைக்கொண்டு கூறக்கூடும்.

ஆனால் இதுவும் சரியன்று; ஏனெனில் போஜனாகிய விக்கிர மனைப் பற்றிக் காலம் ஏற்பட்டபோதிலும், காளிதாஸன் இவர் காலத்தில் இருந்தான் என்பதற்கு என்ன ஆதாரம்? சாளுக்ய அரசன் புளகேசி என்பவர் நாளில் கொடுக்கப்பட்ட ஒருசாஸனத் தில் பாரவி, காளிதாஸன், இவர்களுடைய பேர்கண்டிருக்கிறது. இந்த சாஸனத்தின் காலம் சாலிவாஹன சகவருஷம் 507. அதா வது கி. பி. 585, இத்த காலத்திற்கு முந்தியே காளிதாஸன் பெயர் ஜனங்களுக்குள் பிரசித்தமானதாகத் தெரியவருகிறது. குறைந்தபக்ஷம் சாலிவாஹன சகம் 500 வருஷத்தில் அதாவது 1300 வருஷத்திறகுமுன் காளிதாஸன் ஜீவித்திருந்ததாக, நாம் கர்ணபரம்பரை யாய்க் கேட்டிருப்பவைகளைக்கொண்டு சொல்ல லாம்.

இவன் முதலில் ஸம்ஸ்கிருதம் என்பதே தெரியாதவனாயி ருந்து பின்பு காளிசாதேவியின் வரப்பிரஸாதத்தால் ஸம்ஸ்கிருத வித்தையை அறிந்தான் என்பதற்கு ஜனங்கள் ஒரு கதை சொல் லுவார்கள். மாளவதேசத்தில் அரசன் ஒருவனிருந்தான். அவ னுக்கு நாலுவேதமும்ஆறுசாஸ்திரங்களும் அறிந்த ஸம்ஸ்கிருதத் தில் ஸரஸ்வதிக்கு ஒப்பான ஓர் கன்னிகை இருந்தாள். அவள் தன்னைப்போலப் படித்தவித்வானுக்கே மாலையிடவேண்டுமென்று கருத்துக்கொண்டு, வருகிறவர்களையெல்லாம் பரீக்ஷித்து, ஒரு வரும் தன்னளவு படிக்கவில்லையென்று அவர்களை அவமானப் படுத்தி அனுப்பிக்கொண்டே இருந்தாள். இப்படி வந்துபோ போனவர்கள் அநேகர் இவள் படுத்தின அவமானத்தால் வெட் கமும் கோபமும் அடைந்து இவளை எப்படியாவது மோசம் செய்து இவளுக்கு ஓர் முழுமூடனை மணம்புரிவிக்கவேண்டுமெ ன்று எண்ணங்கொண்டார்கள். இதற்குள் அந்தப் பெண்ணின் பிதாவாகிய அரசனுக்கும் விவாககாலம் தப்பிப்போகிறதே யென்று தன் பெண்மேலேயே வருத்தமுண்டாகி, யாராவது ஒரு பையன் அகப்பட்டால் அவனுக்கு இந்தப் பெண்ணைக் கலியாணம் செய்துவிடவேண்டும் என்னும் அபிப்பிராயம் வந்து விட்டது. இந்த எண்ணத்தை முன்னம் அவமானமடைந்த வித்துவான்கள் அறிந்து, இதுதான் சமயம், ஓர் பெரும்மூட னைத் தேடிப்பிடித்துக் கொண்டுபோய் விடவேண்டுமென்று தங்

2

களுக்குள்ளே தீர்மானித்துக்கொண்டார்கள். அன்றைய தினமே அவர்கள் ஆற்றங்கரைக்குப் போய்க்கொண்டிருக்கையில், ஓர் பிராமணன் ஒருமரத்தின் நுனிக்கிளையில் உட்கார்ந்துகொண்டு அடிக்கிளையை வெட்டிக்கொண்டிருப்பதைக் கண்டு இவன்தான் அவளுக்குத் தகுந்தவனென்றெண்ணி, அந்தப் புத்தியீனனைப் பிடித்துக்கொண்டுபோய் மாப்பிள்ளைமாதிரியாக அலங்கரித்து அரசனிடத்தில் விட்டார்கள். வந்தவன் வெகு அழகாய் இருப்பதைக்கண்டு அரசன் மயங்கி ஆர் இவரென்று விசாரிக்க, கூட வந்தவர்கள் இவர் எங்களுக்கெல்லாம் வித்தியாகுரு என்றார்கள். இவர்கள் யோக்கியதையை அரசன் முன்னமே அறிந்தவனாகையால் குருவினுடைய யோக்கியதையும் அதிகமாகவே இருக்கவேண்டுமென்றெண்ணி, ஒன்றும் விசாரிக்காமலே பெண்ணை மணையில் உட்காரவைத்து, அந்தப் பிராமண பிள்ளைக்குக் கலியாணஞ் செய்துகொடுத்துவிட்டான். அன்று இராத்திரி பள்ளியறையைச் சிங்காரித்து மாப்பிள்ளையைஉள்ளே அனுப்பிவிட, அந்தப் புருஷன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பெண்கள் சிரோன்மணி, தனது கணவன் பெருமூடனாயிருப்பதையும், நடந்திருக்கும் மோசத்தையும் அறிந்துகொண்டு அவன் முகத்தைத் திரும்பிப் பாராமல், ஸம்ஸ்கிருத பாஷையில் சிறிது நீ கற்றுக்கொண்டு வந்தாலொழிய இந்த வீட்டில் நுழையாதே என்று சொல்லியனுப்பிவிட்டாள். அந்தப் பிராமணனோஎன்ன மூடனாயிருந்தபோதிலும ஒரு பெண்ணினால் தனக்கு நேரிட்ட அவமானத்தைப் பொறுக்கக்கூடாமல், அந்த ஊருக்குச் சமீபத்திலிருந்த ஒரு காட்டிற்புகுந்து ஒருவர் கண்ணிலும் படாமல் ஓடிப்போக நிச்சயித்து நடந்துகொண்டிருந்தான். அவன் போனவழியில் ஒரு காளிகோவில் தென்பட்டது. அவனது அதிர்ஷ்டத்தால் அவன் அங்குபோய்ச் சேரும்பொழுது காளிகாதேவி வெளியில் புறப்படுகிற சமயமாய் இருந்தது. மனுஷ்ய சஞ்சாரமில்லாத காட்டில் அன்று ஒருவன் வந்ததைக்கண்டு காளிதிகைத்து நீயாரப்பா என்று வினவ, அவன் தனது துக்கங்களைச் சொல்லிக்கொண்டான். காளி அவனைக்கண்டு பரிதபித்து, அவன் நாக்கை நீட்டச்சொல்லி ஸரஸ்வதியின் பீஜாக்ஷரத்தை அதில் எழுதிவிட்டாளாம். தேவி பிரஸாதத்தால் அப்பொழுதே அவன் எல்லாவித்தைகளையும் கற்றவனாய், தனக்கு கல்விச் செல்வத்தையளித்த தேவியை உத்தேசித்தே தனது முதல்கிரந்தமாகிய சியாமளா தண்டகத்தைப் பாடிக்கொண்டே அன்று இரவே தனது மனையாட்டி வீடுவந்து சேர்ந்தான்.

அவள் இவன் பாடிக்கொண்டு வருவதைக்கேட்டுத் திகைத்து இவன் கதவை இடித்தபொழுது, ஓர்சுலோகத்தால் நீயார்

என்று கேட்டாள். 'இப்போது சிறிது கல்வித்திறம் உண்டாயிருக்கிறது' என்பது அதன்பொருள். அதை மனதில் வைத்துக்கொண்டு அவள்கேட்ட மூன்றுபதங்களைக்கொண்டே மூன்று புஸ்தகங்களை ஸம்ஸ்கிருதத்தில் இந்தப் பெண்ணின் நாயகன் எழுதினதாக ஜனங்கள் சொல்லுகிறார்கள். காளியின் பிரசாதம் பெற்றவனாகையால் இவன் பெயர் காளிதாஸனென்று அன்றுமுதல் விளங்கலாயிற்று. இவன் கவிகளுக்குள்ளெல்லாம் சிரேஷ்டன். தனது பெண்சாதிகேட்ட மூன்று பதங்களில் முதல் பதத்தைக்கொண்டு குமாரஸம்பவம் என்னும் கிரந்தத்தையும், இரண்டாம் பதத்தைக்கொண்டு மேகதூதம் என்னும் காவ்யத்தையும், மூன்றும பதத்தைக்கொண்டு ரகுவம்ச மகா காவ்யத்தையும் காளிதாஸன் இயற்றினான். சாகுந்தலம், மாளவிகாக்கினிமித்ரம், விக்கிரமோர்வசி, என்னும்நாடகங்களையும் இன்னும் அநேக புஸ்தகங்களையும் எழுதினான். ஸமஸ்கிருதத்தில் இவனுடையநடை மிகவும் தெளிவானநடை. அன்றியும் உள்ளதை உள்ளபடி வர்ணிப்பதில் இவனைவிடத் தேர்ந்த கவி ஸம்ஸ்கிருத பாஷையில் இல்லவேயில்லை. "மிருச்சகடி" என்னும் நாடகத்தைச்செய்த சூத்திரககவியை இவனுக்கு இந்த விஷயத்தில் ஒருகால் சமானமாகச் சொல்லலாம். இவன் மிகவும் தெளிவானநடையில் எழுதினபடியால் கடினமானபதங்கள் இவனுக்கு உபயோகிக்கவே தெரியாதென்று வேறு சிலகவிகள் எண்ணிவிட்டார்கள். இதை அறிந்ததும் காளிதாஸ மகாகவியானவன் நளோதயம் என்னும் கிரந்தத்தைப்பண்ணினான். அதற்குப் பதம்பிரிக்க ஒரு கவியாலும் ஆகாமலும் கடைசியாய் அந்தப் புஸ்தகத்திற்கு அவனே பதவுரை எழுதும்படி நேரிட்டது. இவனிடத்தில் மாளவதேசத்து ராஜா அதிக பிரீதிவைத்திருந்தபடியால் மற்றக்கவிகள் இவனை வெறுத்து வந்தார்கள். அன்றியும் இவனைப்பற்றிப் பலகாலங்களில் அரசனிடத்தில் கோட்சொல்லி வந்தார்கள். அரசன் ஒவ்வொருவிதத்திலும் காளிதாஸனைப் பரிசோதித்துப்பார்த்து. இவன் மகாத்மா என்றறிந்தபடியால் அவன் பாதங்களைத் தலைபால் வகித்துச் சாகுமளவும் அவனைக் காப்பாற்றிவந்தான். காளிதாஸன் சாக்தன். அதன் நிமித்தம் இரண்டொருதடவை பூஜைக்காக இவன் மதுமாம்ஸாதிகள் வாங்கிக்கொண்டுபோவதை இவனுக்குச் சத்துருவாகிய ஒரு கவி கண்டு, காளிதாஸன் கக்ஷத்தில் மீன்கொண்டுபோகிறானென்று அரசனிடம் சொல்ல, அரசன் அவனைக் கைபிடியாக வரவழைத்து அவன் கக்ஷத்திலிருந்ததைக் கீழேவைக்கச்சொல்லிப் பார்

த்து, இராமாயணமாய் இருக்கக்கண்டு இவர்மகானென்று அவர் திருவடிகளை வணங்கினனும். இன்னொருசமயத்தில் ஒருவன் காளிதாஸனைப் போசனத்துக்கு அழைத்து அவன் வெகுநேரம் வரையில வராமலிருந்து பிறகு தந்தசுத்தி செய்யாமல்கூட வந்து உட்காந்தபொழுது, இப்படி வரலாமோவென்று ஜனங்கள் கேட்க, உடனே கங்கையில் ஸ்நாநம்பண்ணி என் பாபத்தைப்போக்கிக்கொள்ளுகிறேனென்று அவன் முற்றத்தில் உட்காந்து, கங்கையைப் பிரார்த்திக்க, அந்த நதி ஆகாசமார்க்கமாய் வந்து அவன் தலையில் அபிஷேகஞ்செய்து போயினளாம்.

காளிதாஸன் சாக்தனுகவும் சிவபக்தனுகவும் இருந்தது அவன் புஸ்தங்களில் எங்கும் தெரிவதுடன், அவன் விஷ்ணுதுவேஷி அல்லவென்றும், அத்வைத மதத்தைக் கொண்டவனென்றும் தெரியவருகிறது. அநேக இடங்களில் விஷ்ணுஸ்தோத்திரங்களும் செய்திருக்கிறுன்.

சில ஐரோப்பியர்கள், இவன் ஒருமனிதன் தன் வாழ்நாட்களுள் எழுதக்கூடியதைவிட அதிகமாய் எழுதியிருப்பதைக்கண்டு மலைத்து, காளிதாஸன் ஒருவனல்ல, பலபேர்களாயிருக்கவேண்டுமென்று தங்கள் புத்தகங்களில் எழுதிக்கொண்டிருக்கிறுர்கள். இது நமது மகாகவிகளைக்கொண்டு பொருமைப்படுவதேயன்றி வேறல்ல. காளிதாஸன் என்பது காரணப்பெயர். அப்படி காளியின் வரத்தைப்பெற்றவர்களுக்குள் இவன் ஒருவனென்று ஜனங்கள் சொல்லுகிறுர்களேயன்றி வேறல்ல. அன்றியும் பாஷை நடையில் வித்தியாசம் சில புஸ்தங்களில் தெரிகின்றது. அதனுல் அவன் ஒருவனல்ல என்பார்கள். அப்படி வித்தியாஸ நடை காணப்படும் புஸ்தகம் நளோதயம் ஒன்றே. இதற்குக்காரணம் முன்னுலேயே சொல்லிவிட்டோம். நளோதயம் என்பது பொருமைப்பட்ட கவிகளுடைய வாயை அடக்கச் செய்யப்பட்ட கிரந்தம். மற்ற கிரந்தங்களெல்லாம் ஒரேமாதிரியே. அவைகளில் தென்படும் அதி நுட்பமான வித்தியாசங்கள் இவன் சிறுவயது, கிழவயது முதலிய பருவங்களுக்கேற்ற வித்தியாசங்களேயல்லாது வேறுவித வித்தியாசமல்ல.

(இன்னும் வரும்).

சாக்கைய பௌத்தர்கள்.

152-ம் பக்கத் தொடர்ச்சி.

அன்றேல் ஆடு கசாய் காரனை நம்புவது போலாகும். தற்காலம் ஆரியரால் (வேஷபிராமணர்) தாழ்ந்து கிடக்கும் நம்மவர்கள் சைவ வைணவர்களாய் பிரிந்திருக்கிறார்கள் இருப்பினும் நம்மவர்கள் காட்டேரி, கருப்பன், மாடன், முனி முதலிய தெய்வங்களை வணங்க வேண்டுமென விதித்திருக்கிறார்கள். அதுவுமன்றி சூத்திரன் வேதத்தை தொடவும் வாசிக்கவும் கூடாதென ஆரியர் தர்மம் அறைகின்றது. அப்படியிருந்தும் நாமவரை பின்பற்றி நிற்பது யாதென வுசாவுங்கால் ஆயிரத்து ஐந்நூறு வருஷ காலமாய் வஞ்சகமென்னுங் கயிற்றினால் கட்டி நமது பூர்வ கிரந்தங்களைப் பாழ்படுத்தி கோவில்களையும் மடங்களையும் பிடுங்கிக்கொண்டு உத்தியோக விஷயத்திலேறவிடாமலும், நல்ல வுடுபாவணைகளை உடுத்தவிடாமலும்; கல்விகற்க விடாமலும், ரோட்டு மார்க்கங்களில் நடக்கவிடாமலும் இன்னு மனந்த விஷயங்களில் தலையெடுக்கவிடாமலுஞ் செய்துவந்தபடியாலென்றேற்படுகிறது. இவ்வித சிறைப்பட்டிருந்த சாக்கைய பௌத்தர்கள் பூர்வபுண்ணிய வசத்தால் ஆங்கிலேய துரைத்தனத்தாரிந்நாட்டுக்கு வந்தகாலத்தில் ஜாதி பேதமற்ற திராவிடர்களானபடியால் அவர்களிடம் அபயம்புகுந்து அவர்களரசாட்சி வலுமையடைந்தபின் கொஞ்சம் உயர்வு பெறலாகி கல்வியைக்கற்றும் பௌத்த தர்மம் மறைவுபட்டிருந்தபடியால் யாதொரு ஆதாரமுமின்றி ஆரியரைப் பின்பற்றலாகினோம். பின்பற்றியும் நம்மீதுள்ள பொறாமை நீங்கவில்லை. இவ்விதமான வஞ்சகக் கூற்றையாராவது கவனிக்கிறார்களாவென்றாராயுமிடத்து சிலரென்றேற்படுகிறது. நம்மவரைச் சீர்தாக்குமாறு முன்வந்துள்ள விவேகிகளைப்பகைவரென்றும் பகைவரை மித்திரரென்றும் பணிந்து சொல்கின்றனர் இவர்களாரென்பீரேல் நாகரீகம் பெற்றவர்களும் பட்டணத் தலங்களிலுள்ளவர்களுமேயாம் சகோதரர்காள் நாட்டுப்புறங்களிலுள்ள நம்மவர்கள் ஒருபடிகேழ்வரகுக்கும்வயிற்றுச்சோற்றுக்குமொருநாளெல்லாம் ஏனையோரிட்ட வேலைகளைச் செய்து அன்பு ஈகைசாந்தம் என்னு முக்குணங்களை சிரம்பூண்டு வாளா தவிக்கின்றனர் அவ்வித ஏழைகளைக் கண்கூடாய்ப்பார்த்த விவேகிகள் கலங்காதுநிற்பரோ வீணே சாமிக்கென்று திருப்பதி, திருவண்ணாமலை, சீர்காழி, சிதம்பரம், திருவிடைமருதூர், திருப்பேரூர், காஞ்சி, திருவாரூர் மற்றும்பல ஸ்தலங்களுக்குச் சென்று அவண் சேர்க்காவிடினும் ஆரியருக்கும் கள்ளஞானிகட்கும் கபட நாடக உயர்குலத்தாருக்கு மழிக்குந் திரவியங்களை தாழ்ந்துகிடக்கும் நம்மவர்கட்

கென்று பள்ளிக்கூடங்களைக் கட்டியும் தொழிற்சாலைகளை ஏற்படுத்தியு மாதரித்தால் புண்ணியமாகாதா? தவிரவு முலகின் நன்மைக்கென்று பாடுபட்டவர்கள் சாக்கைய பௌத்தரென்று விவேகிகள் உள்ளங்கை நெல்லிக்கனிபோலெடுத்து காட்டு மிக்காலத்தில் பரமசிவனிடத்தில் மாட்டிறைச்சி திருடி தாழ்ந்த பறையரென வஞ்சகர் புராண மூட்டைகளை சிரமேற்று நாங்களல்ல பௌத்தர்கள் அப்போதே தன்னுண்டமதத்தினரென முன்வருமன்பர்கள் யாரென்றும் எல்லா வகுப்பாரும் ஆரியரைக்குலதெய்வமாகவும் வேதத்துக் காதிகாரணர்களென்றும் பிர்மா முகத்திலிருந்து வந்தவர்களென்றுங் கருதி தொழுதுவர தாழ்த்தப்பட்டுக் கிடக்கும் பறையர்கள்மட்டும் அவர்களைத்தொழாமல் சேரிக்குள் வந்துவிடில் குய்யோ முறையோ வெனக்கும்பல் கூடி சாணைச்சட்டியை யுடைத்துத் தூரத்திவிட்டு அவர்கள் நடந்த மண்ணை யெல்லாம் வாரி ஊருக்கு வெளியே கொண்டுபோய் கொட்டிவிட்டும் ஆரியர் காலைவைத்தவிடம் பாலென்று பேசிக் கொள்வதையுமாராய்வோர் அந்தரங்கம் விளங்கும்.

ஆன்றோர்க் கடிமை.
பெரியசாமிப்புலவர்.

ஒரு சிறுபையனும் அவன்சகோதரியும்.

154-ம் பக்கத்தொடர்ச்சி.

இப்படி அவர்கள் சிலகாலம் அக்காட்டிலேயேவாசஞ்செய்துக்கொண்டிருந்தார்கள். இப்படியிருக்க ஒரு நாள் அத்தேசத்தரசன் அக்காட்டில் வந்து விநோதமாக வேட்டையாடத் துவக்கினன். அப்போது எந்தப்புறத்திலும் வேட்டைநாய்களுடைய கூச்சல்களும் வேட்டைக்காரர்களுடைய இரைச்சல்களும் வேட்டைக் குழாய்களின் தொனிகளும் கேட்கலாயின. அந்தக் கூச்சல்களைக் கேட்டு மாயத்தினால் உருமாற்றப்பட்ட இந்த மானும் குணபூஷணியைப் பார்த்து, அம்மா வேட்டைக்காரர்களுடைய கூச்சல் எவ்வளவு விநோதமாய்க் கேட்கிறது பார்! நான் அங்கே போய் அதன் வேடிக்கையைச் சற்றுப் பார்த்துவிட்டு உடனே ஓடிவந்து விடுகிறேன் என்று சொல்லி தனக்கு உத்தரவுகொடுக்கும்படி வணங்கி வேண்டிக்கொண்டது. அதன் வேண்டுகோளைத் தடுக்கமாட்டாமல் அவள், குழந்தாய் நீ போய் வேடிக்கை பார்த்துவிட்டுச் சீக்கிரமே வந்துசேர் நான் காட்டுமிருகங்களுக்குப் பயந்து கதவை விட்டுக்கதவை எப்போதும் மூ

டிக்கொண்டிருப்பேனாகையால், நீ இங்கே வரும்போது கதவிடித்து, அம்மா கதவைத் திற என்று கூவவேண்டும் கூவாமல் வாயை மூடிக்கொண்டிருந்தால் யாரோவென்று பயந்து நான் கதவைத்திறக்கமாட்டேன் என்றாள். அதுகேட்டு மான்கன்று அப்படியே ஆகட்டுமென்று சந்தோஷமாய்த் துள்ளிவிளையாடிக்கொண்டு வெளியே ஓடிப்போயிற்று. அது வருவதைப் பார்த்து அது வெகு விசித்திரமாயிருக்கவே ராஜாவும் அவனுடைய வேட்டைக்காரர்களும் அதைப் பிடிக்கவேண்டுமென்று துரத்திக்கொண்டு ஓடினார்கள். ஆயினும் அதைப் பிடிக்க அவர்களால் ஆகவில்லை. ஒருசமயத்தில் அவர்கள் கையில் அகப்பட்டுக்கொள்வதுபோல அதிக சமீபத்திலிருக்கும் மறுநிமிஷத்தில் ஒரேதாவாய்த் தாவி வெகுதூரம் ஓடிக்கண்காணாமற் போய்விடும். இப்படியே ஓடிக்கொண்டுபோய் அது பொழுது போகிற தருணத்தில் தன் குடிசையண்டைபோய்ச் சேர்ந்தது சேர்ந்தவுடனே அம்மா கதவைத் திற என்று கூவ, அந்தப் பெண்வந்து கதவைத் திறந்தாள் மான் உள்ளே போய் வேண்டிய புல்லைத்தின்றுவிட்டுச்சுகமாய்ப்படுத்து இராவெல்லாம் நிம்மதியாக நித்திரை பண்ணிற்று.

மறுநாள் காலையில் முன்போலவே மறுபடியும் வேட்டைத் துவக்கமாயிற்று. அந்த வேட்டை இரைச்சல் காதில் கேட்டவுடனே மான் முன்போலவே அங்கே போக அதிக ஆவல்கொண்டு தன்னை வெளியே அனுப்பும்படி அக்காளை வேண்டிக்கொண்டது. அவளும் அதற்கு ஒப்புக்கொண்டு சாயங்காலம் பத்திரமாய் வந்துசேர்ந்து என்னைக்கூவிக் கதவை இடி நான் கதவைத் திறக்கிறேன் என்று சொல்லி மான்குட்டியை வெளியே அனுப்பினாள் கழுத்தில் ஒரு பொன் சங்கிலியோடு கூட அழகாய் ஓடிவருகிற அந்த மானைப் பார்த்தவுடனே வேட்டைக்காரர்கள் அதைத் துரத்தினார்கள். ஆயினும் அது வெகு லாகவமுடையதாய் அன்றையதினமும் அவர்கள் கையில் அகப்படாமலே ஏமாற்றிக்கொண்டு வெகுதூரம் ஓடிற்று. அது கண்டு வேட்டைக்காரர்கள் அதனிடத்தில் அதிக கோபங்கொண்டு மாலைவேளையில் அதைச் சுற்றி வளைத்து மூடிக்கொண்டார்கள். ஒருவன் அதன் காலில் சிறிது காயம் கூடப் பண்ணினான், அப்போதும் அது அவர்கள் கையில் அகப்படாமல் தன் வீட்டுக்கு ஓடிப்போயிற்று. ஆயினும் காலில் காயப்பட்டதுபற்றி முன்போல அவ்வளவு வேகமாய் ஓடக்கூடாமல் மெல்ல ஓடினதால், வேட்டைக்காரர்களுள் ஒருவன் அதைத் துரத்திக்கொண்டு அதன் பின்னேயே வீடுமட்டும் ஓடினான். அந்த மான் வீட்டுக்கதவை இடித்து அம்மா கதவைத்திற என்று கூவினசத்தங்கூட அவனுக்குக் கேட்டது. உடனே கதவு திறக்கப்பட்டதையும், மான் உள்ளே புகு

ந்தபின்பு கதவு மூடப்பட்டதையும் அவன் பார்த்துத் திரும்பிப் போய்த் தான் கண்டதும் கேட்டதுமாகிய எல்லாவற்றையும் அவன் அரசனுக்குச் சொல்லி, நாளையதினமும் நான் அந்தமாளைத் தொடர்ந்துகொண்டுபோய் அதன் செய்திகளைச் செம்மையாய்த் தெரிந்துகொண்டு வருகிறேன் என்றான்.

(இன்னும் வரும்)

பிராமண விதவைகளின் கஷ்ட விமோசன சாதகம்.

பிராமண யௌவன விதவைகளின் கஷ்டங்களைப்பற்றி மேமீ 3௳ மித்திரனில் ஸ்ரீ N. S அய்யங்காரவர்கள் எழுதியிருக்கிறதைப் பிரமாண ஸ்திரீகளும் பிராமண புருடர்களும் வாசித்து அதன் சங்கதியைக்குறித்து ஆலோசிப்பார்களா?

பிராமணர்களாகிய நாம் ஒன்றும் செய்யச் சக்தியற்றவர்களா யிருக்கிறோம். நமக்குச் சாஸ்திரம் வேண்டியதில்லை. நமக்குத் தீர்க்காலானுசாரமாய் வந்திருக்கும் ஆசாரந்தான் நம்மைப் பந்தப்படுத்திவருகிறது. புதிய ஆதாரங்களை ஸ்தாபனம் செய்வதற்குநமக்குச் சிந்தையில்லை தைரியமும் இல்லை,நாம் ஹிந்துக்களாயிருந்தால் நல்ல ஆதாரம் எதையும் நாம் நூதனமாய் அனுஷ்டானம்செய்யப்போகிறதில்லை ஆகையால் ஹிந்துக்களாகிய நாம் நல்லொழுக்கம், நல்ல ஆசாரம், நீதிமார்க்க அனுசரணை, ஸர்வ பூததயைநிஜமான பாரமார்த்திகம். ஸ்திரீகளுக்கு ஸத்தியமான ஞானமும் ஸ்திரீகளுக்கு நல்லமாதிரி இத்தியாதி மஹோன்னத தசை நம்முடைய ஹிந்துக்கள்; அடையவேண்டுமென்று நிஜமாய் விரும்புவார்களானால் ஹிந்துக்கள் ஹிந்துமதத்தைத் தியாஜித்து பவுத்தமதம் அல்லது கிறிஸ்துவமதத்தை ஸ்வீகரிக்கவேண்டும். நாம் ஹிந்துக்களாயிருக்கும் காலத்தில் எந்த நல்லகாரியமும் செய்ய நம்மால் முடியாது.

ஆசாரத் திருச்சபைகள் 25 வருஷகலமாய் என்னசெய்தன? ஒன்றும் இல்லை சபைகளில் இரண்டொருவர் வருஷா வருஷம் அடித்துக்கொள்ளுகிறதுதான் பார்க்கிறோம். ஆகையால் ஆசாரத்திருத்தங்களைப்பற்றி நாம்வீணாய்க்கத்துவானேன்? ஆசாரதிருத்தங்களை அபேக்ஷிக்கிறவன் ஹிந்துமதத்தை விஸர்ஜனம் செய்து கிறிஸ்தவனாகவோ,பௌத்தவனாகவோ ஆய்விடவேண்டும். கஷ்டப்பட வேண்டுமென்று விருப்பமிருக்கிறவர்கள் ஹிந்துக்களாகவே இருக்கட்டும்.

"சி. வி. பாஸ்கரன்."

⁕ பூலோகவியாஸன். ⁕

சென்னை, 1909 ௵ ஜூலை ௴

கூலிக்குழைப்போர்.

சீர்த்தியும் கீர்த்தியும் நாகரீகமும் பாகுபாடுகளும் நிறைந்த இவ்விந்து தேசமானது தனது செல்வாக்கை பெல்லாம்அன்னியரிடம் கொள்ளைகொடுத்ததுபோல் தனது தேசத்தவர்களையும் புற நாடுகளுக்குக் கொள்ளைகொடுத்து குய்யோ முறையோ வென்று தவிப்பதைப் பார்க்க யார்தான் விசனமுறார். இந்தியாவானது சிரேஷ்ட தேயமாகையால் இதன்மீதும் கவர்ச்சிக்கொள்ளாதார் யாருமிலர். அதாவது மற்ற கண்டங்களிலுள்ள எல்லா அரசர்களுக்கும் இவ்விந்தியாவைக் கைப்பற்ற வேண்டுமென்கிற நோக்கமே யிருந்தது. அதுகொண்டே முற்காலத்தில் அநேக மகமதியர்களும் மற்றும் பல அரசர்களும் படையெடுத்து அக்கிரமஞ் செய்தார்கள். இப்போது இவ்விந்தியாவானது மூதல் முதல் ஈஸ்ட் இந்தியா கம்பனியாரால் கைப்பற்றப்பெற்று தற்சமயம் நமது காருண்யம் பொருந்திய ஆளுகையில் நீண்டகாலம் உண்மையும் குடியோம்பலும் சத்தியமும் பரோபகாரமும் மங்காப்புகழ்ச்சியும் பொருந்திய நமது விக்டோரியா சக்ரவர்த்தியம்மாளவர்களால் யாதும் குடிகளுக்குத் தீங்கின்றி ஆளப்பெற்று வந்தது உலகமெலாமறிந்ததே.

அவ்வாறே அம்மையரின் மாணத்தின்பின் மகா கனந்தங்கிய எட்வர்ட் சக்ரவர்த்தியவர்களால் ஆட்சிபுரிந்துவரும் இக்காலத்திலும், அவரது சக்ரவர்த்தி மகுடாபிஷேகத்திற்குரிய ஆட்சியி லடங்கப்பெற்ற நங்குடிகளி லநேகர் இந்தியாவுக்குத் தூரமான அநேக பிரதேசங்களுக்குச் சென்று மெய்வருந்தி,

பட்டாத பாடுபட்டுழைத்தும் கண்ணீரும் கம்பலையுமாக விருப்பதை நமது காருண்ய அரசாட்சியார் சற்று சீர்தூக்கிப் பார்ப்பார்களானால், தனது தேயத்தையும் பந்துக்களையும் விட்டு நட்டால் முதலிய பற்பல குடியேற்ற நாடுகளுக்குச் சென்று உழைத்தும் சிற்சில பிரேரபணைகளால் துக்கப்படும் நமதுஇந்தியர்கள் சுகமடைவார்கள். அதோடு நமது இந்தியாவைச்சற்று மேலதிகாரிகளைக்கொண்டு நன்கு நடத்த சிற்சில ஏற்பாடுகள்செய்வார்களேயானால் நெடுந்தூரம்சென்று வருந்தும் நம்மவர்கள் செல்லாமலும் வருந்தாமலுமிருக்க இடமுண்டாகும். அந்தோ இங்குள்ள வருவாய்க்குறைவால் பீடிக்கப்பட்டு நட்டால் முதலிய தேயங்களுக்கு அநேகர் தமது மனைவிமக்களை விட்டுவிட்டுப் போக நேரிடுகிறது. அவ்வாறு அவர்கள் சென்று சிலநாள்மட்டும் சாப்பாடு முதலியவைகளுக்குக் கஷ்டப்படும் அவர்களது சந்ததியாரின் நிலைமை பரிதபிக்கத் தகுந்ததாயினும், அவர்களால் சிறுகாலங் கழித்து சற்று சுகமடைகிறார்கள். ஏழை இந்தியர் தமது ஜனன பூமியாகிய பரதகண்டத்தை விட்டு அவ்விடம் தனித்திருக்குங்கால் உலகாசாரமாக வேறு மாதர்களின் வலைக்குட் சிக்குண்டு தமது மனைவியரின் நிலைமை யின்னதென்று கிஞ்சித்தும் நினையாமல் மறந்துவிடுகிறார்கள். அதாவது நாம் பரஸ்திரீகளோடு சுகமே யிருக்கின்றோமே, நமது மனையாட்டிகள் கதியென்னவென்று எள்ளளவேனும் நினைக்கிறார்களில்லை. அந்தோ தமது கணவனைவிட்டுப் பிரிந்திருக்கும் இந்தியமாதர்களில் சிலர், தமது கற்பின் நிலையைக்காத்துக்கொண்டு பிறந்த குடிக்கும் புகுந்தகுடிக்கும் இழிவைசுமத்தாமல் கற்புக்கரசியாய் யாவராலும் புகழப்பட்டிருக்கிறார்கள். சிலரோவெனில் 5-வருடங்களுக்குஅக்ரீமெண்டில்சென்றகணவன்வரக்காணப்பெற்றேமில்லையென்று நினைப்பதுடன் அவர்களனுப்பும் பணத்தைப்புசித்து நாணமற்றுவிழலில் அந்நியருக்குஅப்பணத்திலுங்கொடுத்துத்தமது நிலையினின்றும் பிசகிவிடுகிறார்கள். இதனால் அளவிடக்கூடாத கெடுதிகள் ஏற்பட்டுள்ளன. இவ்வளவுக்கும் காரணம் தத்தம்குலமகளை விட்டு நெடுந்தூரமும் நெடுநாளும் ஆடவர்கள் பிரிந்திருப்பதேயாம். அப்பிரிவினை வருவானேனெனில் இந்தியாவில்சரியானபடி வருவாயற்றுப்போனதேயாம்.

அவ்வித வருவாய் அற்றுப்போய் இந்தியா க்ஷேமம் குறைந்து க்ஷாமத்துக்குள்ளானதின் காரண மென்னவெனிலோ. இந்திய சாமான் சரக்குகளெல்லாம் இந்தியாவைவிட்டு வெளி செல்வதினுலாகு மென்பார். இந்தியாவின் சாமான்கள் வெளியேற்றப் படாதிருந்தால் இத்தகைய அதம விலைக்குச் சரக்குகள் விற்காது நிற்கும். நமது இந்திய சகோதரர்களும் வெளிநாடுகளுக்குச் சென்று வருந்தி நையார்கள் என்பதற்கிணங்க, இவ்விந்தியாவிலும் கூலிவேலை செய்பவர்களில் முக்கால் பாகத்தினரும் நாட்டுப்புறங்களில் விவசாயசம்பந்தப்பட்டவர்கள், அல்லது கைத்தொழில் ஜீவனஞ்செய்பவர்கள் முதலியோர்கள் தத்தம் குடும்பத்தில் பரம்பரையாகச் செய்துவந்த கைத்தொழிலையும் கைக்கூலித்தொழிலையும் செய்கிற வர்களாயிருப்பார்கள். பட்டணங்களில் வேலை செய்து கூலிபாடேனும்பட்டு தினசரிகிடைக்கும் வரும்படியைக்கொண்டு ஜீவிப்பவர்களே அநேகர். இவர்களுக்கு இஷ்டமிருந்தால் வேலைக்குப் போவார்கள் அற்றேல் வீட்டிலேயேயிருந்து விடுவார்கள் அன்றாடம் சம்பாதித்து தாமும்தமது குடும்பத்தாரும் சாப்பிடவேண்டு மென்கிற எண்ண முடையவர்களுங்கூட கஷ்டந்தெரியாது சோம்பலுக்குள்ளாகி கடன் பட்டு ஜீவிப்பவரும் வீட்டிலேயேயிருந்து விடுவார்களானுல் அவர்களை நிர்ப்பந்திக்கிறவர்களில்லை.

ஆனுல் இந்த நல்ல ஆட்சிகாலத்தும் கிராமாந்தகாரங்களில் பொருளுள்ளவர் பொருளில்லாது பகையாளிகளால் நசுக்கிவருந்தும் சிலரைத் தங்களுக்கு அடிமைகளென்று ஆண்டுவருகிருர்கள் இது பரிதாபத்தினும் பரிதாபமே. இவர்கள் அப்பொருளாளிகள் பால்படும் கஷ்டத்திற்குத் தகுந்த கூலிகளைக் கிரமப்படி சம்பளமாகவேனும், தினசரியாகவேனும், பொருளாகப் பெறுகிருர்களா இல்லை யில்லை. இவர்கள் படும் அதிக கஷ்டத்திற்குக் கூலியோவெனில் வயிற்றுக்குக் கூழூற்றி முடிவில் இத்தனைபடி நெல்லென்று கொடுத்துவிடுகிறது தான். இதில் இவர்களும் புசிக்கவேண்டும். இவர்கள் மனைவிமக்களும் புசிக்கவேண்டுமாயிருந்தால் ஏழைகுடிகள் எவ்வாறு கடைதேறுவார்கள். இவர்களில் இன்னும் சிலர் சற்று சமர்த்தரானவர்களாயிருந்தால் தாங்கள் செய்யும் கூலியுடன் மற்றவர்கள் அதாவது சற்று விவகாரமில்லாதவர்கள்சம்பாத்தியமாகிய கூலியிலும் பிடிப்பு தட்டென்று ஒவ்

வொரு ஆள்கூலியிலும், ஒவ்வொரு காலணாவோ, அரையணாவோ தரகு எடுத்துக்கொண்டு வருத்தி யிவர்கள் பொருளாளிகளாகிறார்கள். இத்தகையான கூலியாட்கள் கஷ்டநிஷ்டூரத்தைக் கண்கூடாகக் கண்டும் கேட்டுமிருப்பதால் நமது செங்கோல் அரசாட்சியார் தாங்கள் நேமித்திருக்கும் கிராமாதிகாரிகள் மற்றும் முனிசிபுகள், தாசில்தார்கள், சப்கலக்டர்கள், கலக்டர்கள், டிஸ்டிரிக்ட் சூப்பரின்டென்டுகள் மற்றும் பல உத்தியோகஸ்தர்கள்மீது தக்கபடி அரசுரிமை நாட்டவேண்டியது அவசியமேயாம். முன்காலங்களில் ஒருவரிடம் மற்றவர் சிறுதொகை பெற்று அடிமையைப்போல் உழைத்து கூலிபெற்றவர்களைப்போலல்லாது பிரிடிஷ் ராஜாங்கத்தில் தான் இந்தியாவின் பல பாகங்களில் நூலாலைகள், எண்ணெயாலைகள் மற்றும் கைத்தொழில் சாலைகள் முக்கியமான இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டு, கூலிக்குழைப்போர்களுக்கு நாள் கணக்கின்படியும் சரியானபடியும் அவரவர்கள் கூலிகொடுக்கப்பட்டு வருகிறது சில இடங்களில் இத்தகைய தொழிற்சாலைகளிலும் கூலிக்குழைப் பவர்களிடம் கைக்கூலி மறைவாகப் பெறும் சண்டாளராம் தாழ்ந்த ஜாதியாருக்கு செங்கோல் தண்டிக்கநிற்கும். இச்சதிகாரரால்அதாவது சற்று உன்னதஸ்தானத்திலிருந்து தாழ்ந்த ஸ்தானத்தில் கூலிக்குழைக்கும் ஏழைகளிடம் லஞ்சமென்னும் கைக்கூலி பெறுவார்களே தாழ்ந்தசாதி சண்டாளரென்போம். அவ்வாறு செய்யாதவர்கள் தங்களைபபோல் மற்றவர்களையும் நேசித்து கைக்கூலிபெறாது, கூலிக்குழைக்கும ஏழைகளுக்குதவி புரிவோரே உயர்ந்த சாதியாரென்பார்கள். ஒரே வேலை கூலியின் பொருட்டு ஆங்கிலேயரொருவராலும் இந்திய ரொருவராலும் செய்யப்படுங்காலத்தில்இந்தியனாயிருப்பவனுக்குக்குறைந்தகூலியும்ஆங்கிலேயனுக்கு அதிககூலியும் பட்சபாதகமாகக் கொடுத்து நடத்தும் வழக்கம் அரசாட்சியாரால் கவனிக்கப்படவேண்டியதேயாம். இந்த பரிதாபமான வஞ்சகம் நடப்பது அவரவர்கள் தாரதம்மியம்பற்றியென்றுகருதும் பழக்கம் அவ்வளவு சரியானதென்று ஒருபோதும் சொல்ல இடம்பெறாது. கூலிக்குழைப்பவர்கள் நன்கு கவனித்தால் மற்றும் சம்பளங்களுக்கும் வேறுவிஷயமாக உழைப்பவர்களுக்கும் மேம்பாடுண்டாகும். அம்மேம்பாட்டினால் உன்னதஸ்தானத்திலிருப்பவர்களுக்குச் சுகமுண்டாகும். அவர்களுக்குச் சுகமுண்டானால் குடிகளுக்குச் சுகமுண்டாகும் குடிகள் சுகப்பட்டால் செங்கோலாகுமரசாதிபத்தியம் மென்மேலுமோங்குமாக.

விநோதக் கூற்று.

1. கல்வி—வாசிக்கத் தெரிந்துகொண்ட போதே உருவமடைய வேண்டிய மார்க்கத்தைக் கற்றுக்கொள்ளல்.

2. குரு—உண்மை ஞானங்களை மறைத்து பொய்மை ஞானங்களை யூட்டுகிறவர்.

3. ஆசிரியர்—பாடங்கேட்க மாணுக்கர் வரும் நேரமெல்லாம் பணத்துக் காசிப்பவர்கள்.

4. மாணுக்கர்—உபாத்தியாயர் படிக்கவேண்டாமென்றகாலத்தில் படித்து படிக்க வேண்டுமென்ற காலத்தில் படியாது, சொன்ன பாடங்களை அப்போதைக்கப்போதே மறந்து விட்டு வாத்தியாருக்குச் சமயம் வந்தபோது நன்றியறிந் வர்களாக கெடுதிசெய்யதீமையே கறுத்துரு வென்ன வந்தவர்கள்.

5. குருவிசுவாசம்—குருவைக் கண்ட விடத்தில் அடித்துத் துரத்தல்.

6. போன்சுரங்கம்—பொன்னை காட்டி நாளொான்றுக்குக் கணக்கில்லாமனிதகாவு கொள்ளுகிற இடம்.

7. வைதியன்—சாகும் நோத்திலும் பணம் தட்டிக்கொண்டு போகிறவன், வைகுண்ட மாத்திரைக் கதிகாரி.

8. ஸ்நேகன்—நன்றியறிந்த அன்பர்களுக்கு இடுக்கண் செய்து சமயம் வந்தபோது கல்லைப்போட்டு கைவரிசை காட்ட முன்வருபவன்.

9. நல்லமனைவி—நாயகனிருக்க, சொந்தத்தும் வெளியிலும்பரத்தையாய்த் திரிந்து ஆஸ்தி சம்பாதித்து தன்கணவனுக்குக் கொடுத்து வாய்பிடிக்க மருந்து தின்ன வைத்து உப்பிருந்த பாண்டம்போ லாக்கும் பதிவிரதா.

10. வீரன்—சண்டை நேர்ந்த காலத்தில் பதுங்கி சண்டையொழிந்த காலத்தில் புஜந்தட்டி நிற்பவன்.

11. தேசிகன்—வாய்ஞானம் போதித்து, உள்ளொன்றுவைத்துப் புறத்தொன்றுபேசி தான் கெட்டது மன்றித் தன்னை யடுத்தாரையும் கெடுக்கும் போதனுசக்தியையுடைய பெருமைக்காரன்.

12. விலாசம்—பார்க்க வரும் ஸ்திரிகளுக்கு ஆக்டர்களிற்சிலர் கேளிவிலாசமாகி ஊரைவிட்டு ஊர்செலுத்தும் மேல் விலாசம்.

பத்திரிகாபிமானிகள்—எத்தனை நாள் பத்திரிகை வந்தாலும் சந்தா செலுத்தாமல் வாங்கிப் படிக்கக் கூடிய பாக்கிய வான்கள். சந்தாகேட்டாலும் மௌனங்கலகநாஸ்தி யென்றிருப்பவர்கள். மித மிஞ்சிகேட்டெழுதினால் இதுமுதல் பத்திரிகையைநிறுத்திவிடுங்கள் என்றெழுதி வந்தமட்டும் சந்தாவைச்சொந்தமாக்கிக்கொண்டு தந்தானு பாட்டு கேட்கிறவர்கள்.

ஆஸ்ரமா.

கன்மத்தின் பிரகாரம் ஆஸ்ரமம் நான்கு வகைப்படும். அவை பிரஹ்மசரிய, கிரஹஸ்தா, வானப்ரஸ்தா, சந்யாசி. அவை ஒன்றன்பின் ஒன்றான படித்தாமாயுள. ஒரு சிறியன் உபநயனம் பெற்றவுடன் குருவினிடம் சேர்ந்து விடுவன். பிராஹ்மணனுயிருக்கும் பட்சத்தில் ஐந்து வயது முதல் ஏழு வயது வரையில் உபநயனம்பெறலாம். க்ஷத்திரியனுயிருந்தால் 11வயதுமுதல் 20 வரையில் உபநயனம் பெறலாம். வைசினு யிருந்தால் 12-வயதுமுதல் 24 வயதுவரையில் உபநயனம் பெறலாம். உபநயனம் பெற்ற சிறுவனை குருவினிடம் விடவும் அங்கு 9 வருஷம் குருவினிடம் சாஸ்திர ஆராய்ச்சிசெய்து, இவ்வாராச்சியி லிருப்பதே பிரஹ்மசர்யம் அதன்பின் பிரஹ்மச்சாரி யானவன்கிரஹஸ்தனுகி உலகபற்றில் உழன்றபின் வானப்ரஸ்த னுகின்றான். பின் அவன் இவன் என்னும் வேற்றுமை ஒழிந்து,சந்யாசியாகின்றான்.

தர்ணு.

சாஸ்திர விதிப்படி பிராஹ்மணனே மேற்கண்ட ஆஸ்ரமங்களுக்குரித்தானவன். ஆனல் க்ஷத்திரியர்களும் வைசியர்களும்

மேற்கண்ட மூன்றுவித ஆஸ்ரமங்களில்இருந்தேவந்தனர். சூத்தி ரர்களுக்கு கிரஹஸ்த ஆஸ்ரமமே தகுதியானது.

ஜாதி, வேதாந்தம்.

அலையற்ற, சாஸ்வத மான, சத், சித், ஆனந்த சமுத்திர மாகிய பரமாத்மா வினிடத்தில் இவன் பிராமணன் இவன் சண் டாளன் என்ற வேற்றுமை ரூபமான மயக்கம் ஏது? கங்காப்பிர வாகத்திலும், சண்டாள வீதியின் வாய்க்காலிலுமுள்ளஜலத்தில் பிரதிபிம்பிக்கிற சூரியனிடத்தில், பேதம்உண்டா? தங்கப்பாத்தி ரத்திலும் மண்பாண்டத்திலும் உள்ள ஆகாசத்தில் பேதம் உண் டா.? ஜாக்ரத காலத்திலும், ஸ்வப்பனகாலத்திலும் ஸுஷுப்தி காலத்திலும், எந்தஞானம், ஸ்பஷ்ட மாய்ப் பிரகாசிக்கின்றதோ, எந்த ஞானம் ஜகத்சுத்தியாக இருந்து கொண்டு, பிரமாமுதல் கிருமி ஈறாக உள்ளசரீரங்களில் ஊடு உருவிப்பாய்ந்து இருக்கின் றதோ, அந்தஞான ஸ்வரூபம் நானே, தோற்ற வஸ்து நான் அல்ல. இவ்வித நிச்சய ஞானம் எவரிடம் உளதோ, அவர் கீழான ஜாதி யிற் பிறந்த சண்டாளராயிருப்பினும் சரி, மேலான ஜாதியிற் பிற ந்த பிராமணராக இருப்பினும் சரி, அவரே குரு வாவர்.

(சங்கராசாரியார்.)

கடிதங்கள்.

கடிதக்காரர் அபிப்பிராயத்திற்கு பத்திராதிபர்உத்திரவாதி யல்லர்.

பத்திராதிபரவர்கள் கீழ்கண்டிருக்கும் விஷயங்களைத் தங்களது அரிய பத்திரிகையில் பிரசுரிக்க வெகுவாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சென்னை ஜியார்ஜ் டவுனிலுள்ள சர்வதேசாபிமான மதுவி லக்குச் சங்கத்தார் தங்களது 8வது வருடோற் சவத்தைக்கொ ண்டாடச் சென்னை பாபம்ஸ்பெரியசாலையிலுள்ளடேனிஷ்மிஷன் வாசகக்கூடத்தில் இவ்வருடம் ஜூலை 31௳ சனிக்கிழமைமாலை

6-½ மணிக்குக் கூடினார்கள் அப்போது வேதவிற்பனர் சங்கை எம். ஜி. கோல்ட்ஸ்மித் தேசிகர் பீ. ஏ. அவர்கள் அக்கிராசனாதிபதியாய் வீற்றிருந்தார்.

சங்கத்தின் காரியதரிசி கனம் P. Y. தெய்வசிகாமணியவர்கள் கடந்த இரண்டுவருடங்களில் நடத்தப்பட்ட வேலைகளைப் பற்றியும், வரவு செலவு கணக்கு விவரங்களைப்பற்றியும்ஸங்கேபமாக ஓர் அறிக்கைப் பத்திரம் வாசித்தார். அதிலடங்கிய விஷயங்களுள்குடியின் மயக்கத்தால் அறிவிழந்து சிறுமைக்குச்சமீபமாயும்பெருமைக்குத் தூரமாகவும் தாங்களே கெட்டுப் போவதல்லாமல் தம்சந்ததியும் தரித்திரத்தால் க்ஷீணித்துப்போகும் ஜனங்களுக் கென்று, வாராந்தரக் கூட்டமல்லாமல் ஞாயிற்றுக் கிழமைகளிலும் விடுமுறை நாட்களிலும் பட்டணத்தில் மாத்திரமல்ல. வெளியூர்களிலும் யாதோர் சம்பளமுமின்றித் தாங்கள் சொந்தபணத்தைச் செலவிட்டு உற்சாகத்தோடுசென்றுகுடியின் தீமைகளைப்பற்றிப் பிரசங்கித்து வரும் பரோபகாரமானது மிகவும் சிலாகிக்கத் தகுந்ததே. இந்த சங்கதாரைப்போல் பொது நலந்தேடும் விருப்புள்ளவர்கள்ஆங்காங்கு மதுவிலக்குசபைகளை ஸ்தாபித்து (இம்மாதிரி) நடத்துவார்களானால் நம் நாடும் ஜனங்களும் எவ்வளவு மேன்மையை அடையக் கூடும்

கனம் எம். எஸ். இராமசாமிநாயகர் 'தமிழன்' பத்திராதிபர் சங்கை க. அயோத்தி தாஸப் பண்டிதரிவர்களிருவரும் தமிழிலும் கனம் எஸ். அஜீம் உடீன் சாயபு அவர்கள் ஆங்கிலத்திலும் மதுவின் கேட்டைப்பற்றி முறையே வெகு விமரிசையாக உபந்நியாசித்தார்கள். அக்கிராசனாதிபதியும் சமயோஜிதமான இரண்டொரு வார்த்தைகள் பேசினார். முடிவில் வந்தனங்களுடன் புட்பாரங்கள் அக்கிராசனாதிபதிக்கும் உபந்நியாசகர்களுக்கும் சங்கை P. B. இராகவய்யரவர்களுக்கும் சூட்டப்பட்டன இச்சங்கம் உழைப்பில் தளராமல் மென்மேலும்ஊக்கமடையவும் இத்தகைய அநேக சங்கங்கள் ஆங்காங்கு ஏற்படவும் எல்லாம் வல்ல முழுமுதற்கடவுள் அநுக்கிரகஞ் செய்வாராக.

ஓர் பரோபகார சிந்தையான்.